***கவனிக்க.*** *- 2015.010.16 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1938 - 2015 ඔක්තෝබර් මස 23 වැනි සිකුරාදා - 2015.10.23

*1938 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - | விலைக் கட்டளைகள் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 728 | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 728 |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - | மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | - | | |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, நவெம்பர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

*2015 இன் இல. 377*

*டிவீஎப்/ஆர்ஈசீர்/284/01/ஏவை.*

**இலங்கை தரைப்படை - தொண்டர் படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வு*

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர்கள் அவர்களுடைய பெயர்களின் முன்னே குறிப்பிடப்பட்டுள்ள திகதியிலிருந்து தற்காலிக மேஜர் பதவிக்கு பதவியுயர்த்தப்படுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

(அ) கப்ரின் மாதவ பிரசன்ன அபேகுணசேகர, இதேபாப (உ/5309) - 2010.12.01
(ஆ) கப்ரின் சீக்கு வதுகே திலங்க பிரதீப் த சில்வா, இஎசி (உ/6484) - 2014.12.01
(இ) கப்ரின் உடுகல்பிட்டிய எதிரி தந்திரிகே மஞ்சுள பிரசன்ன உடுகல்பிட்டிய, இதேபாப (உ/5894) - 2011.06.30
(ஈ) கப்ரின் வீரசேகர ஆரச்சிகே தொன் சம்பிக கிரிஷாந்த, இதேபாப (உ/5906) - 2011.06.30
(உ) கப்ரின் அலுத் கெதர நிமல் தனன்சிறி, இஇகாப (உ/5953) - 2014.12.01
(ஊ) கப்ரின் ரஞ்ஜன சமரநாயக்க, இஇபுசி (உ/6205) - 2014.12.01
(எ) கப்ரின் துமிந்த ஸ்ரீ உபமால் ஜயமான்ன, ஆர்எஸ்பீ கப (உ/6211) - 2014.12.01
(ஏ) கப்ரின் தந்திரிகே நாலக பெரேரா, இரைப (உ/6213) - 2013.01.06
(ஐ) கப்ரின் பிரசன்ன குணவர்தன, இதேபாப (உ/6076) - 2013.06.28
(ஒ) கப்ரின் கொஹொவில ஆரச்சிலாகே பிரியந்த பண்டார, இதேபாப (உ/6079) - 2014.12.01
(ஓ) கப்ரின் மேனக துஷாந்த சில்வா அமரசிங்க, இஇகாப (உ/6089) - 2013.06.28
(ஔ) கப்ரின் குசுமிந்த சானக யாபாரத்ன, இசிப (உ/6149) - 2014.12.01
(க) கப்ரின் ஹெட்டியாவத்தே ஆரச்சிலாகே ஜகத் நிஷாந்த குமார ஹெட்டி ஆரச்சி, இரைப (உ/6155) - 2014.12.01
(கா) கப்ரின் கலுகலகே அமில ரவீன்திர, இஇமுசி (உ/6160) - 2013.12.20
(கி) கப்ரின் லேகம் ராலலாகே இந்திக துஸ்யன்த பண்டார, இசிப (உ/6163) - 2013.12.20
(கீ) கப்ரின் சன்தரா மரக்கள லசந்த லக்மால் த சில்வா, கெகாப (உ/6165) - 2014.12.01
(கு) கப்ரின் முதுகுட ஆரச்சிலாகே தினேஷ் குமார, இதேபாப (உ/6191) - 2014.06.25
(கூ) கப்ரின் மடவல குலதுங்க முதலிகே ரஞ்ஜன தேசப்பிரிய, விகாப (உ/6192) - 2014.06.25
(கெ) கப்ரின் ஹெட்டிஆரச்சிலாகே பண்துல சூரிய மங்கள பண்டார ஹெட்டிஆரச்சி, இசிப (உ/6461) - 2014.12.18
(கே) கப்ரின் வடவல கங்கானமலாகே தனுஷ்க இந்திரஜித் ரத்னபால, இதேபாப (உ/6462) - 2014.12.18
(கை) கப்ரின் விக்ரமசிங்க ஹீன்கெந்தகே ரவீன்திர கருணாரத்ன, இஇபொசேப (உ/5947) - 2015.01.13
(கொ) கப்ரின் மாரசிங்ககே தமீர, இஎசி (உ/8320) - 2015.02.16

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பொறியியலாளர் கருணாசேன ஹெட்டிஆரச்சி,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

பாதுகாப்பு அமைச்சு,
கொழும்பு,
2015, செத்தெம்பர் 28.

10-866

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

**கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீ**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீயினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவீடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் (இதனகத்துப் பின்னர் ''யூனியன் வங்கி'' எனக்குறிப்பீடு செய்யப்படுகின்ற) கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் 2015 ஓகத்து மாதம் 28 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தின் போது பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இல. 17. 02, நவ்கல, வரகாபொல வீதி எனும் முகவரியில் வசிக்கின்ற (இதனகத்துப் பின்னர் "ஈடுவைத்தவர்கள்" என அழைக்கப்படும்) மிஹிரிகமகே பியல் கீர்தி ரணசிங்க எனவும் மீரிகமகே பியஎல்கீர்தி ரணசிங்க எனவும் மிரிகமகே பியல் கீர்தி ரணசிங்க (தே. அ. அ. இல. 642621840V) எனவும் அழைக்கப்படுகின்றவரும் மற்றும் கொடயாலகே பிரியங்கா சேனாரத்ன (தே. அ. அ. இல. 718134722V) என்பவரும் கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீயிலிருந்து தவணைக் கடன் வசதியொன்றைப் பெற்றுக் கொண்டுள்ளதாலும் ஈடுவைத்தவர்கள் கேகாலை பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. எஸ். விக்ரமநாயக்க அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014.08.27 ஆந் திகதியுடைய 1810 ஆம் இலக்க ஆரம்ப நிலையில்லாத ஈட்டு முறியை நிறைவேற்றி, சொல்லப்பட்ட தவணைக் கடன் வசதியின் காரணமாக (இதனகத்துப் பின்னர் யூனியன் வங்கி எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்பட வேண்டிய எழுபது இலட்சம் ரூபா (ரூ. 70,00,000) மற்றும் அதன் மீதான வட்டியையும் மீளச் செலுத்துவதற்குப் பிணைப் பொறுப்பாக இதன் கீழே அட்டவணையில் நன்கு விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தை ஈடுவைத்து, அடைமானம் செய்துள்ளதாலும், சொல்லப்பட்ட தவணைக் கடன் வசதியின் காரணமாக 2015.06.11 ஆந் திகதியில் உள்ளவாறான மொத்த

நிலுவைத் தொகையாகிய அறுபத்தேழு இலட்சத்து ஐம்பத்தாறாயிரத்து நூற்றுப் பதின்மூன்று ரூபா பதின்நான்கு சதம் (ரூ. 67,56,113.14) ஆகிய தொகையும், 2015.06.12 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை அதன் மீதான தவணை தவறிய வருடாந்த வட்டியும் யூனியன் வங்கிக்கு சொல்லப்பட்ட ஈடுவைத்தவர்களிடமிருந்து வருமதியாகவும் சேர வேண்டியதாகவும் இருக்கின்றது.

கொழும்பு யூனியன் வங்கிப் பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ், சொல்லப்பட்ட பணிப்பாளர் சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் செயல்படுவதனாலும், சொல்லப்பட்ட ஈடுவைத்தவர்கள் மேற்குறித்த கடன் தொகையின் நிலுவையை கொடுத்துத்தீர்ப்பதில் தவணை தவறியுள்ளார்கள் எனத் திருப்திப்பட்டுள்ளதனாலும், அறுபத்தேழு இலட்சத்து ஐம்பத்தாறாயிரத்து நூற்றுப் பதின்மூன்று ரூபா பதின்நான்கு சதம் (ரூ. 67,56,113.14) ஆகிய தொகையையும், 2015.06.12 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை அதன் மீதான தவணை தவறிய வருடாந்த வட்டியையும் மற்றும் சொல்லப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க மேற்குறித்த சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் சொல்லப்பட்ட 2014.08.27 ஆந் திகதியுடைய 1810 ஆம் இலக்க ஆரம்ப நிலையில்லா ஈட்டு முறியின் நியதிகளின் கீழ் யூனியன் வங்கிக்கு மீட்டுக் கொள்வதற்கு உரித்துடைய சகல ஏனைய தொகைகளையும் மீட்டுக் கொள்வதற்கு, இதன் அட்டவணையில் நன்கு விபரிக்கப்பட்டுள்ள சொல்லப்படட்ட டபிள்யூ. எஸ். விக்ரமநாயக்க அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014.08.27 ஆந் திகதியுடைய 1810 ஆம் இலக்க ஆரம்ப நிலையில்லாத ஈட்டு முறியின் கீழும் அதன் பயனாலும் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனத்தை சொல்லப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டத்திற்கேற்ப பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதற்கு உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளராகிய த்ரிவங்க அன்ட் சேனநாயக்க ஒக்ஷனியர்ஸ் நிறுவனத்திற்கு சொல்லப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க மேற்குறித்த சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் அதிகாரமளிப்பதற்கு இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

**அட்டவணை**

மேல் மாகாணத்தின், கம்பஹா மாவட்டத்தில், சியனே கோறளை உடுகஹ பற்று மீரிகம என்ற இடத்தில் பிரதேச சபை மற்றும் பிரதேச செயலக எல்லைகளுக்குள் ரதவதுன்ன கிராம அலுவலர் பிரிவில் ரதவதுன்ன என்ற இடத்தில் அமைந்ருதுள்ள தெல்கஹவத்த என அழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஏ. யாபா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2010.10.19ஆந் திகதியுடைய 3385 ஆம் இலக்க வரைபடத்தில் சகலதும் பிரித்தொதுக்கப்பட்டு துண்டம் A என விபரிக்கப்பட்ட காணி பின்வருமாறு எல்லைகளாகக் கொண்டுள்ளது - வடக்கு : பிரதான வீதி மற்றும் துண்டம் D யின் எஞ்சிய பாகம் ; கிழக்கு : துண்டம் D யின் எஞ்சிய பாகம் மற்றும் வீதி ; தெற்கு : 726 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டம் 10 மற்றும் ; மேற்கு : 726 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டங்கள் 10 மற்றும் 5 என்பவற்றைக் கொண்டு முப்பத்தைந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 35பே.) விஸ்தீரணத்தையும் கொண்டு கட்டடங்கள் மற்றும் அதற்குரிய அனைத்தையும் உள்ளடக்கி H117/55 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின்கட்டளைப்படி,

எஸ். டி. என். எஸ். கன்னங்கர,
சபைச் செயலாளர்.

10-770

**கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீ**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீயினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவீடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் (இதனகத்துப் பின்னர் "யூனியன் வங்கி" எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் 2015 ஓகத்து மாதம் 28 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தின் போது பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இல. 17/02, நவ்கல, வரகாகொல வீதி எனும் முகவரியில் வசிக்கின்ற (இதனகத்துப் பின்னர் "ஈடுவைத்தவர்' என அழைக்கப்படும்) மிஹிரிகமகே பியல் கீர்த்தி ரணசிங்க எனவும் மீரிகமகே பியல் கீர்தி ரணசிங்க எனவும் மிரிகமகே பியல் கீர்தி ரணசிங்க (தே. அ. அ. இல. 642621840V) எனவும் அழைக்கப்படுகின்றவரால் கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீயிலிருந்து தவணைக் கடன் வசதியொன்றைப் பெற்றுக் கொண்டுள்ளதாலும் ஈடுவைத்தவர் கேகாலை பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. எஸ். விக்ரமநாயக்க அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014.03.27 ஆந் திகதியுடைய 1757 ஆம் இலக்க ஆரம்ப நிலையில்லாத ஈட்டு முறியை நிறைவேற்றி, சொல்லப்பட்ட வங்கி வசதியின் காரணமாக (இதனகத்துப் பின்னர் "யூனியன் வங்கி" எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) கொழும்பு யூனியன் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்பட வேண்டிய ஐம்பது இலட்சம் ரூபா (ரூ. 50,00,000) மற்றும் அதன் மீதான வட்டியையும் மீளச் செலுத்துவதற்குப் பிணைப் பொறுப்பாக இதன் கீழே அட்டவணையில் நன்கு விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தை ஈடுவைத்து, அடைமானம் செய்துள்ளதாலும், சொல்லப்பட்ட வங்கி வசதியின் காரணமாக 2015.06.11 ஆந் திகதியில் உள்ளவாறான மொத்த நிலுவைத் தொகையாகிய ஐம்பது இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து எண்ணூற்று இருபத்தெட்டு ரூபா ஒன்பது சதம் (ரூ. 50,99,828.09) ஆகிய தொகையும், 2015.06.12 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை அதன் மீதான தவணை தவறிய வருடாந்த வட்டியும் யூனியன் வங்கிக்கு சொல்லப்பட்ட ஈடுவைத்தவர்களிடமிருந்து வருமதியாகவும் சேர வேண்டியதாகவும் இருக்கின்றது.

கொழும்பு யூனியன் வங்கிப் பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், சொல்லப்பட்ட பணிப்பாளர் சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் செயல்படுவதனாலும், சொல்லப்பட்ட ஈடுவைத்தவர்கள் மேற்குறித்த கடன் தொகையின் நிலுவையை கொடுத்துத்தீர்ப்பதில் தவணை தவறியுள்ளார் எனத் திருப்திப்பட்டுள்ளதனாலும், ஐம்பது இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து எண்ணூற்று இருபத்தெட்டு ரூபா ஒன்பது சதம் (ரூ. 50,99,828.09) ஆகிய தொகையையும், 2015.06.12 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை அதன் மீதான தவணை தவறிய வருடாந்த வட்டியையும்

யூனியன் வங்கிக்கு சொல்லப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க மேற்குறித்த சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் சொல்லப்பட்ட 1757 ஆம் இலக்க ஆரம்ப நிலையில்லா ஈட்டு முறியின் நியதிகளின் கீழ் யூனியன் வங்கிக்கு மீட்டுக் கொள்வதற்கு உரித்துடைய சகல ஏனைய தொகைகளையும் மீட்டுக் கொள்வதற்கு, இதன் அட்டவணையில் நன்கு விபரிக்கப்பட்ட சொல்லப்பட்ட கேகாலை பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. எஸ். விக்ரமநாயக்க அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014.03.27 ஆந் திகதியுடைய 1757 ஆம் இலக்க ஆரம்ப நிலையில்லாத ஈட்டு முறியின் கீழும் அதன் பயனாலும் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனத்தை சொல்லப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டத்திற்கேற்ப பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதற்கு உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளராகிய த்ரிவங்க அன்ட் சேனநாயக்க ஒக்ஷனியர்ஸ் நிறுவனத்திற்கு சொல்லப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க மேற்குறித்த சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் அதிகாரமளிப்பதற்கு இத்தால் தீர்மானிக்கின்றது.''.

#### அட்டவணை

மேல் மாகாணத்தின், கம்பஹா மாவட்டத்தில், ஹபிடிகம் கோறளை, உடுகஹ பற்று மீரிகம என்ற இடத்தில் பிரதேச சபை மற்றும் பிரதேச செயலக எல்லைகளுக்குள் நவ்கல கிராம அலுவலர் பிரிவில் நவ்கல என்ற இடத்தில் அமைந்துள்ள "சியம்பலாகஹவத்த" என அழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எல். டி.மொல்லிகொட என்பவரால் தயாரிக்கப்பட்ட 2014.02.03 ஆந் திகதியுடைய 4254 ஆம் இலக்க வரைபடத்தில் சகலதும் பிரித்தொதுக்கப்பட்டு துண்டம் 1 என விபரிக்கப்பட்ட காணி பின்வருமாறு எல்லைகளாகக் கொண்டுள்ளது - வடக்கு : பிரதேச சபை வீதி ; கிழக்கு : பிரதேச சபை வீதி; தெற்கு : மாரகஹாகொடுவ மற்றும்; மேற்கு: பன்சலேவத்த என்பவற்றைக் கொண்டு முப்பத்தெடடு தசம் ஒன்று ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 38.15பே.) விஸ்தீரணத்தையும் கொண்டு கட்டடங்கள் மற்றும் அதற்குரிய அனைத்தையும் உள்ளடக்கியது.

மேலே சொல்லப்பட்டகாணி கீழே விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்.

மேல் மாகாணத்தின், கம்பஹா மாவட்டத்தில், ஹபிடிகம் கோறளை, உடுகஹ பற்று நவ்கல என்ற இடத்தில் அமைந்துள்ள துண்டம் 11 துண்டம் A இன் பாகம் ''சியம்பலாகஹவத்த'' என அழைக்கப்படும் காணி பின்வருமாறு எல்லைகளாகக் கொண்டுள்ளது. - வடக்கு மற்றும் கிழக்கு: கம்சபா வீதி ; தெற்கு : பொடியா மற்றும் ஏனையவர்களின் வயல் மற்றும் ; மேற்கு : அர்ப்பணம் செய்யப்பட்ட காணியின் பாகம் என்பவற்றைக் கொண்டு ஒரு றூட் (0ஏ. 1றூ. 0பே.) விஸ்தீரணத்தையும் கொண்டு கட்டடங்கள் மற்றும் அதற்குரிய அனைத்தையும் உள்ளடக்கி F138/125 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின்கட்டளைப்படி,

எஸ். டி. என். எஸ். கன்னங்கர,
பணிப்பாளர் சபைச் செயலாளர்.

10-771

### இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

2015.09.09 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கி பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

1. ''பிரசித்த நொத்தாரிசு எஸ். ரணசிங்ஹ அத்தாட்சிப்படுத்திய 2014.11.28 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 372 இன் பேரில் பாணந்துறை, கொரகான, காலி வீதி, இல. 306 என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. நம்முனி கமால் நிஷாந்த டி சொய்ஸா என்பவரிடமிருந்து (மொரட்டுவை, ராவத்தாவத்த, காலி வீதி, இல. 457/1A ஐச் சேர்ந்த திருவாளர்கள் அகுரல ஹாட்வெயார் ஸ்டோர் ஏக உரிமையாளர்) 2015.07.22 வரை முதலும் வட்டியும் ஒரு கோடியே நான்கு இலட்சத்து எண்பத்தேழாயிரத்து நாநூற்று எண்பத்தாறு ரூபா அறுபத்திரண்டு சதம் (ரூ. 1,04,87,486.62) அத்துடன் தொண்ணூற்று எட்டு இலட்சத்து அறுபத்தெட்டாயிரம் ரூபா (ரூ. 98,68,000) ஆண்டுக்கு பதின்மூன்று (13%) வீதத்தில் 2015.07.23 தொடக்கம் கொடுப்பனவுத் திகதிவரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

2. 2014.11.28 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 372 இன் பேரில் வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட ஒரு கோடியே நான்கு இலட்சத்து எண்பத்தேழாயிரத்து நாநூற்று எண்பத்தாறு ரூபா அறுபத்திரண்டு சதம் (ரூ. 1,04,87,486.62) அத்துடன் 2015.07.23 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹாரை மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த T & H ஏலத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்னவுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவுக்கமையவும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி கட்டுபெத்த கிளை முகாமையாளருக்கு இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகிறது.''.

#### அட்டவணை

1. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை, பல்லேபற்றுவில் ராவத்தாவத்த - மேற்கு இல. 557A கிராம அலுவலர் பிரிவு மற்றும் மொரட்டுவை பிரதேச செயலகப் பிரவில் மொரட்டுவை பட்டினசபை எல்லைகளுள் ராவத்தாவத்தையில் அமைந்த ''புளுகஹவத்த'' என அழைக்கப்படும் ''மெந்திஸ் வில்லா'' என யாவரும் அறிந்த காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜீ. எஸ். பெரேரா தயாரித்த 1986.06.06 ஆந் திகதியிட்ட வரைபட இலக்கம் 2138 (எனினும் 2135 என பதிவு செய்த) துண்டு 1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : அதே காணியின் துண்டு 1 மற்றும் துண்டு 1A உம் ; கிழக்கு : காலி கொழும்பு நெடுஞ்சாலையும் ; தெற்கு : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2138 இல் துண்டு 2 உம் ; மேற்கு : அதே காணியின் துண்டுகள் 1 மற்றும் 5 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2138 இன் படி இரண்டு பேர்ச்சு (0ஏ. 0றூ. 2பே.) விஸ்தீரணமுடைய காணியும்

அங்கு அமைந்த கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது தெல்கந்தை நுகேகொடை காணிப் பதிவகத்தில் D 144/ 125 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேற்குறிப்பிட்ட ராவத்தாவத்தயில் அமைந்த "புளுகஹவத்த" என அழைக்கப்படும் "மெந்திஸ் வில்லா" என யாவரும் அறிந்த காணி வரைபடம் இல. 2138 இல் விபரித்த துண்டு 2 (எனினும் 1986.06.06 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 428 என பதிவு செய்த) என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : வரைபடம் இல. 2138 இல் துண்டு 1 உம் ; கிழக்கு : காலி - கொழும்பு நெடுஞ்சாலையும் ; தெற்கு: துண்டு 3Aஉம் ; மேற்கு : அதே காணியின் துண்டு 5 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2138 இன் படி இரண்டு தசம் ஐந்து ஐந்து பேர்ச்சு (0ஏ. 0றூ. 2.55பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது தெல்கந்தை நுகேகொடை காணிப் பதிவகத்தில் D 144/ 126 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

(திருமதி) யூ. ஆர். பீ. பெரேரா,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
கட்டுபெத்த.

10- 810

---

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

2015.09.09 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கி பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

1. ''பிரசித்த நொத்தாரிசு ஈ. கே. எச். எம். கருணாதிலக அத்தாட்சிப்படுத்திய 2010.05.24 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 1240 மற்றும் 1241 இன் பேரில் கெஸ்பேவ, பண்டாரகம வீதி இல. 228/11 தற்சமயம் பண்டாரகம, வல்கம, பாடசாலைக்கெதிராக இல. 93E ஐச் சேர்ந்த திருவாளர்கள் செனுத் பஜாஜ் ரேடர்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்டிடமிருந்து (பணிப்பாளர்கள் பண்ணாரகம, வல்கம, "புபுது" என்னும் முகவரியைச் திரு. விதானகே தொன் புத்ததாச, பண்டாரகம, வல்கம, இல. 116 ஐச் சேர்ந்த திரு. தொம்பகஹ வத்தகே சமந்தா துஷார ஜயசிறி மற்றும் திருமதி விதானகே துலாந்ஜி) கடன் மீது 2015.08.09 வரை முதலும் வட்டியும் ஒரு கோடியே ஒன்பது இலட்சத்து அறுபத்தெட்டாயிரத்து எண்ணூற்று இருபத்தெட்டு ரூபா நாற்பத்தெட்டு சதம் (ரூ. 1,09,68,828.48) அத்துடன் எழுபத்தொரு இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து ஐநூற்று முப்பத்தொன்பது ரூபா ஐம்பத்தொரு சதம் (ரூ. 71,57,539.51) ஆண்டுக்கு பதின்மூன்று (13%) வீதத்தில் 2015.06.06 தொடக்கம் கொடுப்பனவுத் திகதிவரை வட்டியும் உத்தரவாதக் கடிதம் மீது 2015.08.09 வரை முதலும் வட்டியும் முப்பத்துநான்கு இலட்சத்து அறுபத்தாறாயிரத்து ஐநூற்று பதினெட்டு ரூபா தொண்ணூறு சதம் (ரூ. 34,66,518.90) அத்துடன் இருபது இலட்சத்து எழுபத்தொன்பதாயிரம் ரூபா (ரூ. 20,79,000) ஆண்டுக்கு (24%) வீதத்தில் 2015.08.10 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

2. 2010.05.24 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 1240 மற்றும் 1241 இன் பேரில் கடன் மீது ஒரு கோடியே ஒன்பது இலட்சத்து அறுபத்தெட்டாயிரத்து எண்ணூற்று இருபத்தெட்டு ரூபா நாற்பத்தெட்டு சதமும் (ரூ. 1,09,68,828.48) உத்தரவாதப் பத்திரம் மீது முப்பத்து நான்கு இலட்சத்து அறுபத்தாறாயிரத்து ஐநூற்று பதினெட்டு ரூபா தொண்ணூறு சதமும் (ரூ. 34,66,518.90) அத்துடன் 2015.08.10 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹாரை மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த T & H ஏலத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்னவுக்கும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவுக்கமையவும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி பண்டாரகம கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகிறது.''.

### அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், வல்கம வடக்கு இல. 667B கிராம அலுவலர் பிரிவு மற்றும் பண்டாரகம பிரதேச செயலாளர் பிரிவில் பண்டாரகம பிரதேச சபை எல்லைகளுள் ரய்கம் கோறளை அதிகாரி பற்றுவில் கம்மன்பிலயில் அமைந்த ''வல்கம்கலே அல்லது தொலேலந்த'' என அழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. எச். அத்துலத்முதலி தயாரித்த 1988.05.01 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 1987 இல் விபரித்த துண்டு 7A என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு : அல்பேட் கருணாரத்ன உரிமைகோரும் காணியும் மற்றும் வரைபடம் இல.1642 இல்துண்டு 8 உம் ; கிழக்கு : விதாகம இருந்து வீதியாகொட வரை பிரதான வீதியும் ; தெற்கு : வரைபடம் இல. 1987 இல் துண்டு 7B உம் ; மேற்கு : அங்குறுவலதெனிய ஓவிட்டயும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1987 இன் படி இரண்டு றூட் பதினொரு தசம் ஒன்பது பேர்ச்சுகள் (0ஏ. 2றூ. 11.9பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்த கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது ஹொரணை காணிப் பதிவகத்தில் B 168/69 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உத்தரவுபெற்ற நிலஅளையாளர் எஸ். பீ. விக்ரமகே தயாரித்த 2005.02.06 ஆந் திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல. 198/2006 இன் பிரகாரம் மேற்குறிப்பிட்ட காணி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

2. மேற்குறிப்பிட்ட கம்மன்பிலயில் அமைந்த ''வல்கம்கலே அல்லது தொலேலந்த'' என அழைக்கப்படும் காணி மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 198/2006 இல் விபரித்த துண்டு 7A என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு : எல்பேட் கருணாரத்ன மற்றும் ஏனையோர் உரிமைகோரும் காணியும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். டி. எஸ். குணதிலக்க தயாரித்த வரைபடம் இல. 1642 இல் துண்டு 8 உம் ; கிழக்கு : பெருந்தெருவும் ; தெற்கு : டி. எச். அத்துலத்முதலி தயாரித்த வரைபடம் இல. 1987 இல்துண்டு 7A உம் ; மேற்கு : அங்குறுவலதெனிய ஓவிட்டயும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 198/2000 இன்படி இரண்டு றூட் பதினொன்று தசம் ஒன்பது பேர்ச்சு (0ஏ. 2றூ. 11.9பே.)

விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்த கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

(திருமதி) ஆர். ஏ. டி. பீ. ரணசிங்ஹ,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
பண்டாரகம.

10- 811

---

### தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

2015, மாச்சு 23 ஆந் திகதியன்று நடைபெற்ற தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இன் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் சிறப்பாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டது.

"(கடன்பெறுநரான) வெலிகமவில் வியன மரைன் என்ற பெயர் மகுடத்தின்கீழும் குழுமத்தின் கீழும் தனியுரிமையாண்மையில் தொழில்கொண்டு நடாத்துகின்ற வெலிகமவைச்சேர்ந்த களு ஹன்னதிகே நிஹால் நந்தன டி சில்வா என்பவர், தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இன் சார்பில் (வங்கி) பிரசித்த நொத்தாரிசு (திருவாட்டி) பி.கே. சூரியாராச்சி என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011.08.08 ஆந் திகதிய 436 ஆம் இலக்க ஈட்டுமுறி மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளனராதலாலும்,

அத்துடன் 2015, சனவரி 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக ஐம்பத்தொன்பது இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து அறுநூற்று இருபத்தெட்டு ரூபா முப்பத்தேழு சதம் (ரூ. 59,97.628.37) கொண்ட தொகை சொல்லப்பட்ட முறிமீது வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியும் வந்துள்ளதாதலாலும்,

வங்கியின் பணிப்பாளர் சபையானது திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் (பிரதான சட்டம்) தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் செயற்பட்டு, சொல்லப்பட்ட ஐம்பத்தொன்பது இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து அறுநூற்று இருபத்தெட்டு ரூபா முப்பத்தேழு சதம் (ரூ. 59,97.628.37) கொண்ட தொகையையும், அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படா தெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தையும், 2015, பெப்புருவரி 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்குப் பதினாறு தசம் ஐந்து சதவீதத்தில் (16.5%) சொல்லப்பட்ட முறி மீது வருமதியான ஐம்பது இலட்சம் ரூபா (ரூ. 50,00,000) கூட்டு மொத்தப் பிரதான தொகை மீதான வட்டியையும் அதன் பின்னர் பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து, பிரதான சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி அடையப்பட்ட விளம்பரச் செலவுகள், விற்பனைச் செலவுகள், மற்றும் ஏனைய இறுப்பனவுகள் என்பவற்றுடன் சேர்த்து அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட முறி மூலம் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே பாகம் 1 இலும் பாகம் 2 இலும் விவரிக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் அவ்வாதனத்துக்கும் வளவுகளுக்குமான இறையிலி மற்றும் வேறு உரிமை, உரித்து அக்கறை என்பன உட்பட, உத்தரவுபெற்ற ஏலதாரரான திரு. பீ. கே. ஈ. சேனாபதி அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

#### மேலே குறிப்பீடு செய்யப்பட்ட ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

*பாகம் 1*

தென் மாகாணம், மாத்தறை மாவட்டத்தில், வெலிகம கோறளையில், வெலிகம மாநகர சபை எல்லைகளினுள் ஹெட்டிவீதியில் அமைந்துள்ளதும், அளுத்தனகேவத்தவின் ஒன்றுசேர்க்கப்பட்ட காணித்துண்டங்கள் 3 மற்றும் 11 எனவழைக்கப்படும் காணியினதாய் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். சமரசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2007.02.14 ஆந் திகதிய 2074ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் A எனவடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கு : ஹெட்டி வீதி (வீதி) மற்றும் அதேகாணியின் காணித்துண்டம் 4 ; கிழக்கு : அதே காணியின் காணித்துண்டம் 4 மற்றும் 2074 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் B ; தெற்கு : 2074 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் B மற்றும் அதே காணியின் காணித்துண்டங்கள் 2 மற்றும் 12 அத்துடன் ; மேற்கு : அதேகாணியின் காணித்துண்டம் 2 மற்றும் ஹெட்டிவீதி (வீதி); இது, இருபத்தொன்று தசம் எட்டு ஏழு பேர்ச்சு (0ஏ. 0றூ. 21.87பே.) விஸ்தீரணம் கொண்டுள்ளதுடன், மாத்தறைக் காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் D 1161/72 இல் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

*பாகம் 2*

தென் மாகாணம், மாத்தறை மாவட்டத்தில், வெலிகம கோறளையில், வெலிகம பிரதேச சபை எல்லைகளினுள் பொல்வத்தையில் அமைந்துள்ளதும், உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். சமரசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1997.02.13 ஆந் திகதிய 310 ஆம் இலக்க வரைபடத்தில் அனதிகேவத்தவின் காணித்துண்டம் 15 எனவடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கு : அதே காணியின் காணித்துண்டம் 19 (வீதி ஒதுக்கிடம்) ; கிழக்கு : அதே காணியின் காணித்துண்டம் 16 ; தெற்கு : பொலத்து ஏரி நெடுகிலுமான ஒதுக்கிடம் மற்றும் ; மேற்கு: அதேகாணியின் காணித்துண்டம் 14; இது, பதினாறு தசம் ஒன்று ஒன்பது பேர்ச்சு (0ஏ. 0றூ. 16.9பே.) விஸ்தீரணம் கொண்டுள்ளதுடன், மாத்தறைக் காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் பிரிவு D 973/245 இல் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

மேற்கூறப்பட்ட பொல்வத்தையில் அமைந்துள்ளதும், மேற்கூறப்பட்ட அனதிகேவத்தவின் 310 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 19 எனவடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலினதும் மீதான செல்வழியுரிமையுடன் சேர்த்து; இது, இருபத்தைந்து தசம் இரண்டு ஒன்று பேர்ச்சு (0ஏ. 0றூ. 25.21பே.) விஸ்தீரணம் கொண்டுள்ளது.

சாதனங்களுடன் மின்சார வழங்கல் முறைமை, நீர்வழங்கல் முறைமைச் சாதனங்கள், தொலைத்தொடர்புச் சாதனங்கள் மற்றும் காற்றுப்பதனிடுதற் சாதனங்கள் உட்பட, மேலே மேலும் விபரமாக

விவரிக்கப்பட்ட சொல்லப்பட்ட காணித்துண்டுடன் இப்போது இணைக்கப்பட்ட அல்லது நிரந்தரமாகப் பொருத்தப்பட்ட அல்லது இதன் பின்னர் காலத்துக்குக் காலம் இணைக்கப்படக்கூடிய அல்லது நிரந்தரமாகப் பொருத்தப்படக்கூடிய அசைவற்ற பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி, சாதனங்கள், இணைப்புகள் பொருத்திகள் மற்றும் சேவைகள் என்பவற்றுடனும் அவற்றைத் தனித்தனியாகவும் சேர்த்து.

பணிப்பாளர்/பிரதான நிறைவேற்றலுவலர்,
தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ.

10-830/1

---

## தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

2015, மாச்சு 23 ஆந் திகதியன்று நடைபெற்ற தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இன் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் சிறப்பாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டது:-

"(கடன்பெறுநரான) வெலிகமவில் வியன மரைன்என்ற பெயர் மகுடத்தின்கீழும் குழுமத்தின் கீழும் தனியுரிமையாண்மையில் தொழில்கொண்டு நடாத்துகின்ற வெலிகமவைச் சேர்ந்த களு ஹன்னதிகே நிஹால் நந்தன டி சில்வா என்பவர், தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இன் சார்பில் (வங்கி) எழுதி நிறைவேற்றப்பட்ட 2011.08.08 ஆந் திகதிய 2011/GAL/TLF/2100/76 ஆம் இலக்க ஈட்டுமுறி மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளனராதலாலும்,

அத்துடன் 2015, சனவரி 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக இரண்டு இலட்சத்து இருபத்து மூவாயிரத்து நூற்று பத்தொன்பது ரூபா எண்பத்தொரு சதம் (ரூ. 2,23.119.81) கொண்ட தொகை சொல்லப்பட்ட முறிமீது வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியதாகவும் வந்துள்ளதாதலாலும்,

வங்கியின் பணிப்பாளர் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம்இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் (பிரதான சட்டம்) தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் செயற்பட்டு, சொல்லப்பட்ட முறியினால் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்ட அசைவுள்ள ஆதனம் இரண்டு இலட்சத்து இருபத்து மூவாயிரத்து நூற்று பத்தொன்பது ரூபா எண்பத்தொரு சதம் (ரூ. 2,23,119.81) கொண்ட தொகையையும் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தையும், சொல்லப்பட்ட முறிமீது வருமதியான ஒரு இலட்சத்து எண்பத்தாறாயிரத்து ஆறு ரூபா எழுபது சதம் (ரூ. 1,86,006.70) கொண்ட கூட்டு மொத்தப் பிரதான தொகை மீது 2015, பெப்புருவரி 1 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்குப் பதினாறு தசம் ஐந்து சதவீதத்தில் (16.5%) வட்டியையும் அதன் பின்னர் பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து, பிரதான சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி அடையப்பட்ட விளம்பரச் செலவுகள், விற்பனைச் செலவுகள், மற்றும் ஏனைய இறுப்பனவுகள் என்பவற்றுடன் சேர்த்து அறவிடுவதற்காக, உத்தரவுபெற்ற ஏலதாரரான திரு. பீ. கே. ஈ. சேனாபதி அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

### மேலே குறிப்பீடு செய்யப்பட்ட ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

மீன்பிடிக்கலம் : 1 மீன்பிடிப்படகின் பரிமாணங்கள் - நீளம் - 40.03 அடி, உத்தரம் - 12.00 அடி, ஆழம் - 07.03 அடி, வடிவமைக்கப்பட்ட இழுவை - 04.00 அடி, மரக்கலத்தின் வகை - பலநாட்படகு, என்ஜின் இல. 00969(0437), வகை : YANMAR, குதிரைவிசை : 39 குவி, படகுத்தரிப்பிட இல. B.S.M./ 40V/ 48, கப்பலின் உடற்பகுதியை நிர்மாணிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட பொருள்: கன்னார், இனங்காணல்/பதிவு இல. IMUL-A-0579-MTR, முதலாவது பதிவுத் திகதி : 02.04.2001.

மீன்பிடிக்கலம் : 2 மீன்பிடிப்படகின் பரிமாணங்கள் - நீளம் - 40.06 அடி, உத்தரம் - 13.06 அடி, ஆழம் - 17.09 அடி, வடிவமைக்கப்பட்ட இழுவை - 03.08 அடி, மரக்கலத்தின் வகை - பலநாட்படகு, என்ஜின் இல. 341612, வகை : லேலன்ட், குதிரைவிசை: 57 குவி, படகுத்தரிப்பிட இல. SL.B-313, கப்பலின் உடற்பகுதியை நிர்மாணிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட பொருள்: கன்னார், இனங்காணல்/பதிவு இல. IMUL-A-0577-MTR, முதலாவது பதிவுத் மத்தி : 11.10.2006.

மேற்படி அசைவுள்ள ஈடுவைக்கப்பட்ட ஆதனம் மாத்தறைக் காணிப் பதிவகத்தின் பதிவுப் பிரிவினுள் தென் மாகாணம், மாத்தறை மாவட்டத்தில், மாத்தறை, மிரிஸ்ஸ, மிரிஸ்ஸ துறைமுகத்தில் வைத்திருக்கப்படுகின்றது அல்லது கிடக்கின்றது அல்லது களஞ்சியப்படுத்தப்படுகின்றது.

பணிப்பாளர்/பிரதான நிறைவேற்றலுவலர்,
தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ.

10-830/2

---

## தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

2015, பெப்புருவரி 13 ஆந் திகதியன்று நடைபெற்ற தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இன் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் சிறப்பாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டது.

"(கடன்பெறுநர்களான) இலங்கையின் கம்பனிகள் சட்டத்தின் கீழ் முறையாகக் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியாகவுள்ளதும், கம்பளையில் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக்

கொண்டுள்ளதுமான லக்ஹில் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் கம்பளையைச் சேர்ந்த மாலா ரூபசிங்க என்பவர், தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இன் சார்பில் (வங்கி) கம்பளையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு (திருவாட்டி) தில்மினி கே. சமரதுங்க என்பவரினால் இரண்டும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2013.04.24 ஆந் திகதிய 1224 ஆம் இலக்க முறி மீதும், 2014.04.01 ஆந் திகதிய 1356 ஆம் இலக்க முறி மீதும் வருமதியாகவுள்ள கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளனராத லாலும்,

அத்துடன் தவிசாளருடன் முகாமைப் பங்காளருமாகவுள்ளவரும் கீழே விவரிக்கப்பட்ட ஆதனத்தினதும் வளவுகளினதும் இறையிலி சொந்தக்காரராகவுள்ளவரும் முதலாவதாகப் பெயர் குறிப்பிடப்பட்ட கடன்பெறுநரின் கணிசமானளவு அக்கறையைக் கொண்டுள்ள வருமான மாலா ரூபசிங்க என்பவர், சொல்லப்பட்ட முறிகளின்கீழ் தமது இறையிலி உரிமை உரித்து மற்றும் அக்கறையை வங்கிக்கு ஈடுவைத்துள்ளராதலாலும்,

அத்துடன் 2015, சனவரி 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக ஒரு கோடியே எண்பத்திரண்டு இலட்சத்து முப்பத்தொன்பதாயிரத்து தொளாயிரத்து ஐம்பத்துநான்கு ரூபா எழுபத்தைந்து சதம் (ரூ. 1,82,39,954.75) கொண்ட தொகை சொல்லப்பட்ட முறிமீது வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியும் வந்துள்ளதாதலாலும்,

வங்கியின் பணிப்பாளர் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம்இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் (பிரதான சட்டம்) தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் செயற்பட்டு, சொல்லப்பட்ட முறியினால் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்ட ஆதனத்துக்கும் வளவுகளுக்குமான இறையிலி மற்றும் வேறு உரிமை உரித்து மற்றும் அக்கறையுட்பட்ட ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ஒரு கோடியே எண்பத்திரண்டு இலட்சத்து முப்பத்தொன்பதாயிரத்து தொளாயிரத்து ஐம்பத்துநான்கு ரூபா எழுபத்தைந்து சதம் (ரூ. 1,82,39,954.75) கொண்ட தொகையையும் அல்லது விற்பனை நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தையும், சொல்லப்பட்ட முறிகள்மீது வருமதியான ஒரு கோடியே ஐம்பது இலட்சம் ரூபா (ரூ. 1,50,000.00) கொண்ட கூட்டு மொத்தப் பிரதான தொகை மீது 2015, சனவரி 1 ஆந் திகதியிலிருந்து வற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்குப் இருபத்தொன்று தசம் ஐந்து சதவீதத்தில் (21.5%) வட்டியையும் அதன் பின்னர் பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து, பிரதான சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி அடையப்பட்ட விளம்பரச் செலவுகள், விற்பனைச் செலவுகள், மற்றும் ஏனைய இறுப்பனவுகள் என்பவற்றுடன் சேர்த்து அறவிடுவதற்காக, உத்தரவுபெற்ற ஏலதாரரான திரு. பீ. கே. ஈ. சேனாபதி அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

### மேலே குறிப்பீடு செய்யப்பட்ட ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில் உடபலாத்த பிரதேச செயலகப் பிரிவு உடபலாத்தவின் கங்க பஹல கோறளையில் இல்லவத்துர கிராம அலுவலர் பிரிவு இல. 1110 இல் கம்பளைப் பட்டின மற்றும் நகர சபை எல்லைகளினுள் 4 ஆம் இலக்க வட்டாரம் - ஹில் வீதியில் அமைந்துள்ளதும், 9 ஆம், 9A ஆம் வரிமதிப்பீட்டு இலக்கங்களைக் கொண்டதும், உடுவலகெதரவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டீ.எம். பீ. பி. ரம்புக்வெல்ல என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2004, ஓகத்து 10 ஆந் திகதிய 1461A ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் A என அடையாளமிடப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கு: உனன்தென்ன மற்றும் ஏனையோருக்குரிய காணிகள் ; கிழக்கு : ஹில் வீதியில் 11ஆம், 13 ஆம் வரிமதிப்பீட்டிலக்கங்களைக் கொண்ட உடுவெலகெதரவத்த ; தெற்கு : ஹில்வீதியைத் தனிவேறாக்குகின்ற கட்டு வடிகால் மற்றும் ; மேற்கு : ஹில் வீதியில் 7 ஆம் இலக்க வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்ட காணி ; பரப்பளவில் இது, ஹில் வீதியில் அமைந்துள்ள 9ஆம், 9A ஆம் பிரிவரிமதிப்பீட்டிலக்கங்களைக் கொண்ட ஆதனத்துடனும் வீட்டுடனும் அதன்மீதுள்ள எல்லாவற்றுடனும் பதினைந்து தசம் மூன்று சைவர் பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 15.30பே.) கொண்டுள்ளதுடன் கம்பளைக் காணிப்பதிவகத்தல் தொகுதி/பக்கம் E27/92 இல் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

பின்வருவனவுட்பட மின்சார வழங்கற் சாதனம், நீர்வழங்கற் சாதனம், தொலைத்தொடர்புச் சாதனம் மற்றும் வேறு அசைவுள்ள எந்திரத்தொகுதி, பொறித்தொகுதி என்பன. ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படாமல், மேற்படி காணித்துண்டம் அத்துடன்/அல்லது அதன்மீதுள்ள கட்டிடங்களுடன் இப்போது இணைக்கப்பட்ட அல்லது நிரந்தரமாகப் பொருத்தப்பட்ட அல்லது இதன்பின்னர் காலத்துக்குக் காலம் இணைக்கப்படக்கூடிய அல்லது நிரந்தரமாகப் பொருத் தப்படக்கூடிய அசைவுள்ள எல்லா பொறித்தொகுதி, இணைப்புகள், பொருத்திகள் மற்றும் சேவைகள் என்பவற்றுடனும் அவைத் தனித்தனியாகவும்.

பணிப்பாளர்/பிரதான நிறைவேற்றலுவலர்,
தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ.

10-831

---

### கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ

*1990ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் PQ 116) பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

கணக்கு இலக்கம் : 1440003276
கடன் கணக்கு இலக்கம் : 1548944- நிசன்கா ஆராச்சிகே தயாசாந்த

2015, மாச்சு 30 ஆந் திகதி கூடிய கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது:

"கடன் எடுத்த நிசான்கா ஆராச்சிகே தயாசாந்த கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பீஎல்சீ சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜே. ஆர். கமகே 2010.10.14 ஆந் திகதியுடைய ஈட்டுமுறி இல. 4210 மற்றும் 2011.08.10 ஈட்டு முறி இல. 4379 மற்றும் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு கே. என். பெரேராவின் 2012.08.13 ஆந் திகதியுடைய ஈட்டுமுறி இல. 1721 மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறு புரிந்துள்ளதாலும் அத்துடன் 2015.02.15 ஆந் திகதி வரை கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பீஎல்சீக்கு இரண்டு கோடி ரூபா (ரூ. 2,00,00,000) வருமதியாக உள்ளதாலும், கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் விசேட

சட்டத்தின் 4 ஆம் பிரிவின் படி மேற்படி ஈட்டு முறி இலக்கங்கள் 4210, 4379 மற்றும் 1721 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள இவ் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணிகளை மேற்படி கூறப்பட்ட பணத்தொகையான ரூபா 2,00,00,000 உடனும் 2015.02.16 ஆந் திகதி முதல் ஏலத் திகதி வரை ரூபா 2,00,00,000 க்கு ஆண்டொன்றுக்கு 24% வட்டியும் விளம்பரச் செலவுகள் வேறு கொடுப்பனவுகள் சேர்த்து அறவிடுவதற்காக (பணம் செலுத்தியிருப்பின் கழித்து) கொழும்பு 12, புதுக்கடை வீதி, இல. 200, 2 ஆவது மாடியில் உள்ள ஏலதாரர்கள் திரிவன்கா சேனநாயக்க உத்தரவு பெற்ற ஏலதாரர் எல். பி. சேனநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.''.

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், ராகம்பத்து அலுத்குரு கோரளையில் கம்பஹா பிரதேச சபை எல்லையில் கம்பஹா மாவட்ட செயலாளர் எல்லை இல. 223 அகிரவிட்ட கிராம அலுவலர் பிரிவில் அகிரவிட்ட கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் ஏ.ஏ. பி. ஜே. பெரேராவின் 2007.12.26 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 2145 இல் காட்டப்பட்ட லொட் 1 எல்லைகள் - வடக்கு : பிரதான வீதி; கிழக்கு : சேபாலவுக்கு சொந்தமான காணி ; தெற்கு : எல மற்றும் எல தொகுதி ; மேற்கு : நில அளவையாளர் கே. ஏ. பி. கஸ்தூரிரத்னவின் 1992.02.13 ஆந் திகதியுடைய வரைபட இல. 2854 இல் காண்பிக்கப்பட்ட லொட் 1. இக் காணியின் விஸ்தீரணம் 0ஏ. 1றூ.31.58பே. மேற்படி சொல்லப்பட்ட வரைபட இல. 2145 படி இக் காணி கம்பஹா காணிப்பதிவகத்தில் B 735/61 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

(திருமதி) ரஞ்சனி கமகே,
கம்பனிச் செயலாளர்.

10-872

---

### ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கிளை : சிலாபம்
வாடிக்கையாளரின் பெயர் : பொன்னம்பெருமாகே ரோய் தினேஷ் பர்ணாண்டோ மற்றும் பொன்னம்பெருமாகே ஜோசப் ரஞ்சன் பர்ணாண்டோ

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2015 ஆம் ஆண்டு செத்தெம்பர் 23 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

" பொன்னம்பெருமாகே ரோய் தினேஷ் பர்ணாண்டோ மற்றும் பொன்னம்பெருமாகே ஜோசப் ரஞ்சன் பர்ணாண்டோ கடப்பாடு உடையவர்களாகவும், இத்துடனான அட்டவணையில் மேலதிகமாக விபரிக்கப்பட்டுள்ளமைக்கு அமைய பாதுகாப்பிற்காக அடைமானமாக வைக்கப்பட்ட காணி மற்றும் வளவுகள், ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. சார்பில், நீர்கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜி. எம். எம். பர்ணாண்டோவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011, திசெம்பர் 22 ஆந் திகதியிடப்பட்ட 3765 ஆம் இலக்க முறி மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள். ஆதலாலும், 2015, யூலை 31 ஆம் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது எழுபது இலட்சத்து பத்தாயிரத்து இருநூற்று நான்கு ரூபா எழுபத்தைந்து சதம் (ரூ. 70,10,204.75) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும்,

அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ், இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்ட 2011, திசெம்பர் 22 ஆந் திகதியிடப்பட்ட சொல்லப்பட்ட 3765 ஆம் இலக்க முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் ஒன்று சேர்க்கப்பட்ட தொகையான எழுபது இலட்சத்து பத்தாயிரத்து இருநூற்று நான்கு ரூபா எழுபத்தைந்து சதம் (ரூ. 70,10,204.75) பணத்தொகையை 2015, ஓகத்து மாதம் 01 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் எல். பி. சேனநாயக்காவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.''.

### அட்டவணை

வட மேல் மாகாணம் (சிலாபம் பதிவுப் பிரிவிற்கு உட்பட்டது) புத்தளம் மாவட்டத்தில் உள்ள பிற்றிகல் கோறளை வடக்கின் ஆனவிழுந்தான் பற்றுவின் மாதம்பே- சிலாபம் பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட தெதுரு ஓயா கிராமத்தில் உள்ள மில்லிசென்ற்வத்த என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம், உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். எம். திசாநாயக்காவினால் தயாரிக்கப்பட்ட 1997.07.28 ஆந் திகதியிடப்பட்ட 4637 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள்- வடக்கு: வரைபட இலக்கம் P P Pu 2360 இல் உள்ள காணித்துண்டு 14 மற்றும் வரைபட இலக்கம் P P Pu 3570 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 1 (வீதிக்கான வழி) ; கிழக்கு : வரைபடஇலக்கம் P P Pu 3570 இல் உள்ள காணித்துண்டு 3 மற்றும் புத்தளம் சிலாபம் பிரதான வீதி ; தெற்கு : காணித்துண்டு 2 ; மேற்கு : P P Pu 2361 இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டுகள் 30, 29, 28, 27 மற்றும் 26. அத்துடன் ஒரு றூட் மற்றும் இருபத்துநான்கு தசம் ஆறு பேர்ச். (0ஏ. 1றூ. 24.6பே.) விஸ்தீரணமான ஆதனம், சிலாபம் மாவட்ட காணிப் பதிவகத்தில் 49/87 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

மேல் குறிப்பிடப்பட்ட ஆதனம் அண்மையில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். சிறிதரனினால் தயாரிக்கப்பட்ட 2011.11.21 ஆந் திகதியிடப்பட்ட 5057 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதன் விபரங்கள் பின்வருமாறு :

வட மேல் மாகாணம் (சிலாபம் பதிவுப் பிரிவிற்கு உட்பட்டது) புத்தளம் மாவட்டத்தில் உள்ள பிற்றிகல் கோறளை வடக்கின் ஆனவிழுந்தான் பற்றுவின் மாதம்பே- சிலாபம் பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட

தெதுரு ஓயா கிராமத்தில் உள்ள மில்லிசென்ற்வத்த என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாவற்றையும் கொண்ட சொல்லப்படட்ட 5057 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : நிலஅளவை நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட P வரைபடம் Pu 2361 இல் உள்ள காணித்துண்டு 26, 27, 28, 29 மற்றும் 30 மற்றும் பிரதேச சபை வீதி ; கிழக்கு : பிரதேச சபை வீதி மற்றும் சிலாபம் புத்தளம் வீதி (வீ. அ.அ. ச.) ; தெற்கு : சிலாபம் - புத்தளம் வீதி (வீ. அ.அ. ச.) மற்றும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். எம். திசாநாயக்காவினால் தயாரிக்கப்பட்ட 4637ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 2 ; மேற்கு : நில அளவையாளர் எஸ். எம். திசாநாயக்காவினால் தயாரிக்கப்பட்ட 4637 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 2 மற்றும் நிலஅளவை நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட P வரைபடம் Pu 2361 இல் உள்ள காணித்துண்டுகள் 26, 27, 28, 29 மற்றும் 30 அத்துடன், ஒரு றூட் மற்றும் இருபத்து மூன்று தசம் ஆறு சைபர் பேர்ச். (0ஏ. 1றூ. 23.60பே.) விஸ்தீரணமான ஆதனம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே. ஏ. எல். ரீ. ரணவீர,
பி.பொ.மு.( சட்டம்) /சபைச் செயலாளர்.

10- 928/1

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கிளை : பொகந்தலாவை
வாடிக்கையாளரின் பெயர் : பாண்டியன் வாசுதேவன்

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2015 ஆம் ஆண்டு செத்தெம்பர் 23 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

"பாண்டியன் வாசுதேவன் கடப்பாடு உடையவராகவும், ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. சார்பில், பிரசித்த நொத்தாரிசு எம். எஸ்.பெரேராவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011, ஓகத்து 30 ஆந் திகதியிடப்பட்ட 2530 ஆம் இலக்க முறி மற்றும் 2013, திசெம்பர் 5 ஆந் திகதியிடப்பட்ட 3421 ஆம் இலக்க முறி என்பன மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும், 2015, யூலை 31 ஆம் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறிகள் மீது இரண்டு கோடியே பதினைந்து இலட்சத்து ஆயிரத்து அறுநூற்று அறுபத்தொன்பது ரூபா அறுபத்தொரு சதம் (ரூ. 2,15,01,669.61) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ், இதற்கான முதலாவது இரண்டாவது மற்றும் மூன்றாவது அட்டவணைகளில் முழுமையாக விபரிக்கப்பட்ட 2530 மற்றும் 3421 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூ. 2,15,01,669.61 பணத்தொகையை 2015, ஓகத்து மாதம் 01 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் ஐ. டபிள்யூ. ஜயசூரியவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது."

### முதலாவது அட்டவணை

1. மத்திய மாகாணம், நுவரஎலிய மாவட்டத்தில் உள்ள அம்பகமுபவ கோறளையின் அம்பகமுவ பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஹற்றன் - டிக்கோயா நகர சபைக்கு உட்பட்ட ஹற்றனில் உள்ள ஹற்றன் எஸ்டேட் என அழைக்கப்படும் காணி, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. எல். டி. வை. விஜயவர்தனாவினால் தயாரிக்கப்பட்ட 2006.07.07 ஆந் திகதியிடப்பட்ட 11934 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1ஏ எனஅடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள்- வடக்கு: 1143 ஆம் இலக்க வரைபடத்தின் காணித்துண்டு 1 மற்றும் வீதி (வீ.அ. அ.ச.) ; கிழக்கு : வீதி (வீ.அ. அ.ச.) மற்றும் காணித்துண்டு 1பி ; தெற்கு : காணித்துண்டு 1பி மற்றும் 1143 ஆம் இலக்க வரைபடத்தின் காணித்துண்டு 10 ; மேற்கு: 1143 ஆம் இலக்க வரைபடத்தின் காணித்துண்டு 10 மற்றும் 1143 ஆம் இலக்க வரைபடத்தின் காணித்துண்டு 1 அத்துடன் ஒன்பது பேர்ச் (0ஏ.0றூ. 9பே.) விஸ்தீரணத்துடனான கட்டடம் மற்றும் அத்துடனான எல்லாம்.

2. மத்திய மாகாணம், நுவரஎலிய மாவட்டத்தில் உள்ள அம்பகமுபவ கோறளையின் அம்பகமுவ பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஹற்றன் - டிக்கோயா நகர சபைக்கு உட்பட்ட ஹற்றனில் உள்ள ஹற்றன் எஸ்டேட் என அழைக்கப்படும் காணி, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. எல். டி. வை. விஜயவர்தனாவினால் தயாரிக்கப்பட்ட 2006.07.07 ஆந் திகதியிடப்பட்ட 11934 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1பி எனஅடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள்- வடக்கு: காணித்துண்டு 1ஏ, வீதி (வீ.அ.அ.ச.) மற்றும் 6364 ஆம் இலக்க வரைபடத்தீல் உள்ள காணித்துண்டு 2 ; கிழக்கு : 6364 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 2 ; தெற்கு: 6364 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 2 மற்றும் 1143 ஆம் இலக்க வரைபடத்தின் காணித்துண்டு 9 மற்றும் 10 ; மேற்கு: காணித்துண்டு 1ஏ அத்துடன் ஆறு பேர்ச் (0ஏ.0றூ. 6பே.) விஸ்தீரணத்துடனான கட்டடம் மற்றும் அத்துடனான எல்லாம்.

### இரண்டாவது அட்டவணை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில் உள்ள கனக்வத்த கோறளவின் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கண்டி மாநகர சபைக்கு உட்பட்ட பஹீரவக்கந்த 236 ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவிற்கு உட்பட்ட யட்டிநுவரவின் கங்காவத்த கோறளவின் பஹீரவகந்தவில் உள்ள நிக்கமடிற்றே ஹேனவின் பகுதி என அழைக்கப்படும் காணி, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எல். ஏ. டீ. சீ. விஜயதுங்கவினால் தயாரிக்கப்பட்ட 1956.09.25 மற்றும் 1956.10.01 ஆந் திகதியிடப்பட்ட 4035 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 2 என அடையாளம்

இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட ஆதனத்தின் எல்லைகள் - வடக்கு: தொகுதி இலக்கம் 04 ; வடகிழக்கு : தொகுதி இலக்கம் 01 ; தென்கிழக்கு மற்றும் தென்மேற்கு : 20 அடி அகலமான வீதி; வடமேற்கு : தொகுதி இலக்கம் 5 ; அத்துடன் இருபத்தாறு தசம் ஏழு சைபர் பேர்ச் (0ஏ.0றூ. 26.70பே.) விஸ்தீரணத்துடனான வரிமதிப்பீட்டிலக்கம் 78 ஐக் கொண்டுள்ள வீடு தற்போது பஹீரவகந்தை பாதைக்கு அப்பால் உள்ள16 ஒழுங்கை, அன்னிவத்த மற்றும் அத்துடனான எல்லாம். கண்டி மாவட்ட காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் ஏ374/264 இன் கீழ் பதிவு செய்யப்பட்டது.

மேற்றிப்பிடப்பட்ட காணி அண்மையில் நிலஅளவை செய்யப்பட்டதன் விபரங்கள் பின்வருமாறு :

மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில் உள்ள கங்காவத்த கோறளவின் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கண்டி மாநகர சபைக்கு உட்பட்ட பஹீரவக்கந்த 236 ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவில் உள்ள அன்னிவத்தவில் உள்ள வரிமதிப்பீட்டிலக்கம் 78 ஐக் கொண்டுள்ளதும் தற்போது வரிமதிப்பீட்டிலக்கம் 16 ஐக் கொண்டுள்ளதுமான நிக்கமடிட்றேஹேன என அழைக்கப்படும் காணி, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சி. பலமகும்புரேயினால் தயாரிக்கப்பட்ட 1986.03.11 ஆந் திகதியிடப்பட்ட 1731 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட ஆதனத்தின் எல்லைகள் - வடகிழக்கு : 74 ஆம் இலக்க வளவுகள், பஹிரவகந்தவழி முன்னர் $4035^2$ இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 1 ; தெற்கு மற்றும் தென்மேற்கு: பஹீரவகந்த வழி ; வடமேற்கு : 80/17 ஆம் இலக்க வளவுகள், பஹீரவகந்த வழி முன்னர் $4035^2$ ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு இலக்கம் 04 மற்றும் 05 ; அத்துடன், இருபத்து ஏழு பேர்ச் (0ஏ. 0றூ. 27பே.) அல்லது 0.0682884 ஹெக்டயார் விஸ்தீரணத்துடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம்.

மேற்குறிப்பிடப்பட்ட காணி அண்மையில் நிலஅளவை செய்யப்பட்டதன் விபரங்கள் பின்வருமாறு :

மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில் உள்ள பிரிவு இலக்கம் 05 இல் உள்ள பட்டணமும் சூழலும் மற்றும் கங்காவத்த கோறளவின் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கண்டி மாநகர சபைக்கு உட்பட்ட பஹீரவகந்த 236 ஆம் இலக்க கிராம சேவகர் பிரிவில் உள்ள பஹீரவகந்தவில் (முன்னர் அன்னியவத்த என தெரிவிக்கப்பட்டது) உள்ள வரிமதிப்பீட்டிலக்கம் 16 ஐக் கொண்டுள்ள வீதிய பண்டார ஒழுங்கை (முன்னர் 78 ஆம் இலக்கம், பஹிரவகந்தத வழி) நிக்கமடிற்றி ஹேன என அழைக்கப்படும் காணி, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சி. பலமகும்புரேயினால் தயாரிக்கப்பட்ட 2013.09.05 ஆந் திகதியிடப்பட்ட 5229 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட ஆதனத்தின் எல்லைகள் - வடகிழக்கு : இலக்கம் 14, வீதிய பண்டார ஒழுங்கை (முன்னர் இலக்கம் 74, பஹீரவகந்த வழி) ; தெற்கு மற்றும் தென்மேற்கு : வீதிய பண்டார ஒழுங்கை ; வடமேற்கு : 18 ஆம் இலக்க வளவுகள், வீதிய பண்டார ஒழுங்கை (முன்னர் இலக்கம் 80/ 17, பஹீரவகந்த வழி) அத்துடன் இருபத்தாறு தசம் எட்டு ஒன்பது பேர்ச் (0ஏ. 0றூ. 26.89பே.) (ஹெக். 0.0680) விஸ்தீரணத்துடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே. ஏ. எல். ரீ. ரணவீர,
பி.பொ.மு.( சட்டம்) /சபைச் செயலாளர்.

10- 928/ 2

**பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க.**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்களினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள் ) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.*

(துங்காலை கிளை) -வாடிக்கையாளரின் பெயர்: பிரதீப் நிரோஷன் ஜயரத்ன

2015 ஆம் ஆண்டு ஒகத்து 26 ஆந் திகதியன்று நடைபெற்ற பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் ப.வ.க. இன் பணிப்பாளர் சபை கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டது :-

“கடப்பாடுடையவரான/ ஈடுவைத்தவரான பிரதீப் நிரோஷன் ஜயரத்ன, பதிவு இல. பீகியூ 48 ஐக் கொண்ட பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் ப. வ. க. இன் சார்பில் மாத்தறையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு பீ. ஜீ. சீ. நாணயக்கார அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2013, யூலை 19 ஆந் திகதியிடப்பட்ட முதன்மை ஈட்டு முறிகள் இல. 13811 மற்றும் இல. 13813 ஆகிய இரண்டின் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதாதலாலும்,

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. (இதனகத்துப் பின்னர் சில வேளைகளில் “வங்கி” என அழைக்கப்படும்) இற்கு மேற்சொல்லப்பட்ட முறி இலக்கங்கள் 13811 மற்றும் 18313 இன் மூலம், 2015.06.08 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவு திகதி வரை எழுபத்திரண்டு இலட்சத்து நான்காயிரத்து எழுநூற்று அறுபத்தொரு ரூபா முப்பத்துமூன்று சதம் (ரூ. 72,04,761.33) கொண்ட தொகை மீது ஆண்டிற்கு பதினாறு தசம் ஐந்து சதவீத (16.5%) வட்டியுடனும் சேர்த்து பணமுதல் கணக்கின் மீது எண்பத்தொரு இலட்சத்து ஐம்பத்துமூவாயிரத்து நூற்று ஐம்பத்தாறு ரூபா ஐம்பத்தைந்து சதம் (ரூ. 81,53,156.55) கொண்ட தொகை மற்றும் 2015.06.07 ஆந் திகதிவரையான வட்டி மற்றும்,

2015.06.08 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவு திகதி வரை ஐம்பத்தொன்பதுஇலட்சத்து பதினையாயிரத்து முந்நூற்று தொண்ணூற்று ஒரு ரூபா முப்பத்தேழு சதம் (ரூ. 59,15,391.37) கொண்ட தொகை மீது ஆண்டிற்கு பன்னிரண்டு தசம் ஒன்று மூன்று சதவீத (12.13%) வட்டியுடனும் சேர்த்து பணமுதல் கணக்கின் மீது அறுபத்துநான்கு இலட்சத்து பதின்மூவாயிரத்து எண்ணூற்று பதினொரு ரூபா எண்பத்தொன்பது சதம் (ரூ. 64,13,811.89) கொண்ட தொகை மற்றும் 2015.06.07 ஆந் திகதிவரையான வட்டி தற்போது வரவேண்டியும் உரியதாகவுள்ளதாதலாலும்,

சொல்லப்பட்ட தொகை ஒரு கோடியே நாற்பத்தைந்து இலட்சத்து அறுபத்தாறாயிரத்து தொளாயிரத்து நாற்பத்து நான்கு சதம் (ரூ. 1,45,66,968.44) ஐ, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய பணங்கள் மற்றும் செலவுகள் மற்றும் மேற்கூறப்பட்ட திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை வட்டியுடனும் சேர்த்து அறவிடுவதற்காக, இத்துடனுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள மற்றும் முதன்மை ஈட்டுமுறி இலக்கங்கள் 13811 மற்றும் 13813 இன் மூலம் பிரதீன் நிரோஷன் ஜயரத்னவினால் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனத்தை பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்ய, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க , வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம்,

கொலன்னாவை, விஹார மாவத்தை, இல. 182/3 (50/3) ஐச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் துசித்த கருணாரத்ன அவர்களுக்கு அதிகாரமும் தத்துவமும் அளிக்கிறதென இத்தால் தீர்மானிக்கின்றது.''

**அட்டவணை**

தென் மாகாணம், ஹம்பாந்தோட்டை மாவட்டம், கிருவாபற்று தெற்கு, தங்காலை பிரதேச செயலாளர் பிரிவில், நெட்டோல்பிட்டி - ஹம்பாந்தோட்டை பிரதேச சபை எல்லைகளுக்குள், ரண்ண மேற்கு கிராம அலுவலர் பிரிவு எல்லைகளில் ரண்ணவில் அமைந்துள்ளதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். ஸ்ரீபத்தன அவர்களால் தயாரிக்கப்பட்டு 2010.11.25 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 4539 இல் குறிப்பிடப்பட்டதும் "மீகஹகொரட்டுவ" என அழைக்கப்படும் காணியின் 2 இன் பிரித்து வேறாக்கப்பட்டதுமான துண்டு 2பி இன் அதன்கண் அமைந்துள்ள முழு மண், பயிர்ச்செகைகள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து முழுவதும். சொல்லப்பட்ட துண்டு 2பி இன் எல்லைகளாவன - வடக்கு: இதே வரைபடத்தின் துண்டு 2ஏ ; கிழக்கு : வரைபடம் இல. 1641/ஏ இல் துண்டு 3 ; தெற்கு : வீரக்கெட்டியிலிருந்து ரண்ண வரையான பிரதான வீதி; மேற்கு : வரைபடம் 1641/ஏ இல் துண்டு 1 மற்றும் வரைபடம் 557ஏ இல் துண்டு 1, இது, பதின்மூன்று பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 13பே.) விஸ்தீரணமுடையது. தங்காலை மாவட்ட காணிப் பதிவகத்தில் ஜீ 06/49 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

தேவிகா ஹல்வத்துர,
முகாமையாளர் - அறவீடுகள்

10-918

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.